# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஒன்பதாம் பத்து

## பத்தாம் திருவாய்மொழி - மாலை நண்ணி
## 'நீர் விரும்பியவை யாவும் உமது இவ்வுடம்பு முடியும் போது தருவேன்' என்று ஆழ்வாருக்கு எம்பெருமான் அருள, அவர் உவந்து, திருக்கண்ணபுரத்திலே சென்று அவனைச் சேருமாறு பிறர்க்கு உபதேசித்தல்

** மாலை நண்ணித் * தொழுது எழுமினோ வினை கெட *
காலை மாலை * கமல மலர் இட்டு நீர் **
வேலை மோதும் மதிள் சூழ் * திருக்கண்ணபுரத்து *
ஆலின் மேல் ஆல் அமர்ந்தான் * அடி இணைகளே 1

கள் அவிழும் மலர் இட்டு * நீர் இறைஞ்சுமின் *
நள்ளி சேரும் வயல் சூழ் * கிடங்கின் புடை **
வெள்ளி ஏய்ந்த மதிள் சூழ் * திருக்கண்ணபுரம்
உள்ளி * நாளும் தொழுது எழுமினோ தொண்டரே! 2

தொண்டர்! நுந்தம் * துயர் போக நீர் ஏகமாய் *
விண்டு வாடா மலர் இட்டு * நீர் இறைஞ்சுமின் **
வண்டு பாடும் பொழில் சூழ் * திருக்கண்ணபுரத்து
அண்ட வாணன் * அமரர் பெருமானையே 3

மானை நோக்கி * மடப் பின்னை தன் கேள்வனை *
தேனை வாடா மலர் இட்டு * நீர் இறைஞ்சுமின் **
வானை உந்து மதிள் சூழ் * திருக்கண்ணபுரம் *
தான் நயந்த பெருமான் * சரண் ஆகுமே 4

சரணம் ஆகும் * தன தாள் அடைந்தார்க்கு எல்லாம் *
மரணம் ஆனால் * வைகுந்தம் கொடுக்கும் பிரான் **
அரண் அமைந்த மதிள் சூழ் * திருக்கண்ணபுரத்
தரணி ஆளன் * தனது அன்பர்க்கு அன்பாகுமே 5

அன்பன் ஆகும் * தன தாள் அடைந்தார்க்கு எல்லாம் *
செம்பொன் ஆகத்து * அவுணன் உடல் கீண்டவன் **
நன்பொன் ஏய்ந்த மதிள் சூழ் * திருக்கண்ணபுரத்து
அன்பன் * நாளும் தன மெய்யர்க்கு மெய்யனே 6

மெய்யன் ஆகும் * விரும்பித் தொழுவார்க்கு எல்லாம் *
பொய்யன் ஆகும் * புறமே தொழுவார்க்கு எல்லாம் **
செய்யில் வாளை உகளும் * திருக்கண்ணபுரத்து
ஐயன் * ஆகத்து அணைப்பார்கட்கு அணியனே 7

அணியன் ஆகும் * தன தாள் அடைந்தார்க்கு எல்லாம் *
பிணியும் சாரா * பிறவி கெடுத்து ஆளும் **
மணி பொன் ஏய்ந்த மதிள் சூழ் * திருக்கண்ணபுரம்
பணிமின் * நாளும் பரமேட்டி தன் பாதமே 8

பாத நாளும் * பணியத் தணியும் பிணி *
ஏதம் சாரா * எனக்கேல் இனி என் குறை? **
வேத நாவர் விரும்பும் * திருக்கண்ணபுரத்து
ஆதியானை * அடைந்தார்க்கு அல்லல் இல்லையே 9

இல்லை அல்லல் * எனக்கேல் இனி என் குறை? *
அல்லி மாதர் அமரும் * திரு மார்பினன் **
கல்லில் ஏய்ந்த மதிள் சூழ் * திருக்கண்ணபுரம்
சொல்ல * நாளும் துயர் பாடு சாராவே 10

** பாடு சாரா * வினை பற்றற வேண்டுவீர் *
மாட நீடு * குருகூர்ச் சடகோபன் ** சொல்
பாடல் ஆன தமிழ் * ஆயிரத்துள் இப்பத்தும் *
பாடி ஆடிப் * பணிமின் அவன் தாள்களே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---